தமிழ் நாட்டின்

சில

அபூர்வ விலங்குகள்

எம். ஏ. பாஷா,
மாநில வனவிலங்கு அதிகாரி.

Southern Forest Rangers College,
LIBRARY
Regd. No. 2679
Date
COIMBATORE

WL-236: Tamilnattyn Sela Aburva Velakukal



TNFA - CBE
Centenary Library
16886

மாநில வன இலாகாவினல் வெளியிடப்பட்டது.
தமிழ்நாடு அரசாங்கம்.

தமிழ்நாட்டின்

சில

அபூர்வ விலங்குகள்

23641

Southern Forest Rangers College.
LIBRARY
Regd. No. 2679 25/100
Date 10.2.84
COIMBATORE.

எம். ஏ. பாஷா
மாநில வனவிலங்கு அதிகாரி

440

TNFA - CBE
Centenary Library
16886

©
தமிழ்நாடு அரசாங்கம்
1963

சென்னை மாநில வன இலாக்கா
1963

முகவுரை

நம் தமிழ்நாடு பலதரப்பட்ட உயிரின வகைகளுக்குப் பெயர் பெற்றது. இதுகாறும் நாம் மிருகங்களையும், பறவைகளையுமேதான் வாழ் பிராணிகளாகக் கருதி வந்தமையால் நம் நாட்டில் உள்ள சில முக்கிய பிராணிகளான மலைப்பாம்பு கட்டுவிரியன், பல்லியினங்கள் ஆகியவற்றை நாம் கவனியாது இருந்தோம். இந்த ஊர்வன வகை உயிரினங்களை நாம் பயத்துடனும் ஒருவித அருவருப்புடனும் நோக்கி வந்தோம். இவைகள் மற்ற உயிரின வகைகளுக்கு செய்துவரும் தொண்டை நாம் மறந்து கவனியாது வந்ததால் இவ்வினங்களே அழிந்து கொண்டு வரும் தருவாயில் இருக்கின்றன. சில இடங்களில் தோல்களிலிருந்து வரும் இலாபத்தின் பொருட்டு இவைகள் பூண்டுடன் அழிக்கப்பட்டமையால் அங்கே சுண்டெலிகள், எலிகள் விருத்தியடைந்து, பயிரினங்களை அழித்து வருகின்றன.

வனவிலங்குகளைப் பாதுகாப்பதில் உள்ள அனேக பிரச்சினைகளில், அவ்விலங்குகள்பால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள தவறான எண்ணங்களை மாற்றுவதும், அவ்விலங்குகளால் ஏற்படும் நன்மைகளை விளக்குவதும் ஒன்று. நமக்கு அவைகளைப்பற்றி தெரியாதிருப்பதால் நாம் இவ்விலங்கினங்களிடம் ஒருவித அசிரத்தையுள்ளவர்களாய் இருக்கிறோம். ஆகவே, இவ்விலங்கினங்களின் உயிர் வாழ்வு, அவைகளைப்பற்றி நாம் அறிந்து சிரத்தையெடுத்துக்கொள் வதைப் பொருத்திருக்கிறது.

ஊர்வனவற்றால் நம் நாட்டிற்கு ஏற்படும் நன்மைகளைப் பற்றி மக்கள் அறிந்து, அவைகளைக் காப்பாற்ற முற்படும் பொருட்டு, இவைகளைப்பற்றிய ஒரு நூல் அச்சிட்டு, வழங்க வேண்டுமென்று நம் மாநில வனவிலங்குகள் போர்டார் சிபாரிசு செய்தனர். அகில இந்திய வனவிலங்குகள் பாதுகாப்புக் குழுவினர் மலைப்பாம்புகள் அழிக்கப்படாமல் காப்பாற்றப்பட வேண்டுமென சிபாரிசு செய்தனர்.

59/2—1எ

நம் மாநில வனவிலங்கு அலுவலர் திரு. எம். ஏ. பாஷா அவர்கள் விலங்குகளின் ஆராய்ச்சிகளில் அதிக சிரத்தை யெடுத்துக் கொண்டு, இந்தப் புத்தகத்தில் முதுமலை வன விலங்குகள் சரணாலயத்தில் காணப்பட்ட ஊர்வனவற்றின் தகவல்களைச் சேகரித்து நல்ல முறையில் படங்களுடன் தொகுத்துத் தந்துள்ளார்.

இப்புத்தகத்தில் கண்டுள்ள விஷயங்களால் மக்கள் ஊர்வனவற்றை நன்கு தெரிந்துகொண்டு, அவைகளை அழி யாமல் காக்கப் பெரிதும் உதவுவார்கள் என்று நிச்சயமாய் நான் நம்புகிறேன்.

சென்னை,

14—10—1963.

தா. ஜெயதேவ்,
தலைவர், வனத்துறை.

உள்ளடக்கம்

		பக்கம்
முன்னுரை	.. ..	1— 3
மலைப்பாம்பு	.. ..	5— 9
சாரைப்பாம்பு	.. ..	11—12
உடும்பு	.. ..	13—15

பட விளக்கம்

	பக்கம்
முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் மலைப் பாம்பு.	4
மலைப்பாம்பின் உடைந்த முட்டைகள் ..	6
மலைப்பாம்பு வயிறு நிறைய தின்ற பிறகு சுருண்டு இருத்தல்.	8
சாரைப்பாம்பு	10
உடும்பு	14
மோயார் பள்ளத்தாக்கில் உள்ள நீர்வீழ்ச்சி ..	கடைசி அட்டைப் படம்.

தமிழ் நாட்டின் சில அபூர்வ விலங்குகள்.

எம். ஏ. பாஷா,
மாநில வனவிலங்கு அதிகாரி.

முதுகெலும்புள்ள பிராணிகள் வகையில் "ஊரும் ஜந்துக்கள்" வரலாறு மிகச் சுவையானது. ஊரும் ஜந்துக்கள், குளிர்ந்த ரத்தமுள்ளவை. அவற்றின் உடல் வெப்ப நிலை, நிலைத்த தன்மை உடையதல்ல. சுற்றுப்புற நீர் அல்லது காற்றை அனுசரித்து அவற்றின் உடல் வெப்பநிலை அமைகின்றது. அவற்றின் உடலுக்கு மேல் செதிள் பாகங்கள் உண்டு. பாம்பு, பல்லி, முதலை, ஆமை ஆகியவை இந்த ஊரும் ஜந்து வகையைச் சேர்ந்தவை. வர்த்தகத்துக்கான பொருள்கள் என்ற வகையில் ஊரும் ஜந்துக்கள் ஏராளமான அளவில் கொல்லப்படுகின்றன. 1932-ம் ஆண்டில், இந்தியா, ஊரும் ஜந்துக்கள் வகையில் 25 லட்சம் தோல்களை ஏற்றுமதி செய்தது. 1933-ல் இந்த ஏற்றுமதி 30 லட்சமாக உயர்ந்தது. ஊரும் ஜந்துக்களின் தோல்கள் உழைப்புக்கு நன்ருகத் தாங்கக் கூடியவை. தேவைக்கு ஏற்ப எந்த வர்ணம் வேண்டுமானுலும் கொடுத்துக் கொள்ளலாம்.

ஊரும் ஜந்துக்களில் அற்புதமான ஜந்து பாம்பு ஆகும். இடம் விட்டு இடம் மாறுவதற்கு பாம்புக்கு கால் போன்ற உறுப்புகள் கிடையா. விலா எலும்புகளைக் கொண்டு பாம்பு நகருகின்றது. இதன்மூலம் பாம்பு மிக மெதுவாகத்தான் ஊர்ந்து செல்லும் என்று கருதக் கூடாது. வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல வேகமாகச் செல்லக்கூடிய பாம்புகளும் உள்ளன. சில பாம்புகள் நீரில் நீந்தக் கூடியவை. சில மரத்தின் மேல் ஏறக் கூடியவை. பல பூமியில் வளைதோண்டி வசிக்கின்றன. கால் போன்ற உறுப்புகள் இல்லாததால், இவைகளின் இயக்கம் எந்த வகையிலும் தடைப்பட்டுவிடவில்லை. பூமிக்குள் வளையில் வசிக்கும் பிராணிகளுக்கு ஒரு வகையில் கால் போன்ற உறுப்புகள் இருந்தால்தான் கஷ்டம்.

நாக்கில் விஷம்.—பாம்பின் நாக்கு நீண்டு, நுனியில் பிளவு பட்டதாக இருக்கிறது. இது முக்கியமாக உணர்வதற்கான உறுப்பாகவே பயன்படுகிறது. வாய் மூடியிருக்கும் நிலையிலும், ஒரு துவாரம் வழியாக, அது நாக்கை வெளியே நீட்டக் கூடியது. நாக்கிலே அதற்கு விஷம் இல்லை. மனிதனுக்குத் தவிர வேறு எந்தப் பிராணிக்கும் நாக்கிலே 'விஷம்' இல்லை என்று சொல்லுவார்கள். பாம்புக்குக் கண் இமைகள் கிடையா. கண்ணாடி போன்ற ஒரு மெல்லிய சவ்வு கண்ணை மூடியிருக்கும். பாம்பின் நிலைகுத்திய பார்வைக்கு அதுவே காரணம் ஆகும். பாம்புக்குப் புறச்செவி கிடையாது. உட்செவியும் நன்கு கேட்கக் கூடியதல்ல. தரையின்மீது, அல்லது உடலின் மீது படும் சலனங்களைக் கொண்டு பாம்பு ஒலியை உணருகின்றது.

பாம்பு மாமிச பட்சணி வகையைச் சேர்ந்தது. தவளை, பறவைகள், மீன் போன்றவைகளை அது சாப்பிட்டு வாழ்கிறது. பருந்து, வல்லூறு போன்றவை, பாம்பைக் கொன்று தின்னக் கூடியவை என்பதையும் குறிப்பிட வேண்டும். பாம்பைப் பாம்பே தின்பதும் உண்டு. பாம்புக்கு ஜென்ம எதிரி கீரிப் பிள்ளை. பகைக்கு உதாரணம் சொல்லுவோர் 'பாம்பும் கீரியும் போல' என்று சொல்லுவார்கள். கீரிப்பிள்ளை இருக்கு மிடத்தில் பாம்பு அநேகமாக இராது.

பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்று சொல்லத்தக்க விதத்தில் அது அபாயகரமானதாக இருந்தாலும், அவை இடைவிடாமல் அழித்து ஒழிக்கப்பட்டாலும் அத்துவானப் பகுதி களிலும், நாட்டுப்புறங்களிலும் பாம்புகள் இருந்து வருகின்றன. பாம்புகளில் சில வகைகள் மட்டும்தான் விஷம் உள்ளவை. மற்றவை அபாயமில்லாதவை. அதுமட்டுமல்ல; அவை உபயோகமாகவும் இருக்கின்றன.

பாம்புக்கு வயது ஆக ஆக அது சட்டையை உரிக்கிறது. வருஷத்துக்கு இரண்டிலிருந்து நான்கு தடவை வரை பாம்பு சட்டை உரிக்கிறது. சட்டையுரிக்கும் காலத்தில் பாம்பு பசி தீபனம் இழந்து விடுகிறது. ஏதாவது கடினமான பொருள் மீது உராய்வது மூலம் சட்டை உரிக்கத் தொடங்குகிறது. தலைப் பகுதியில் சட்டை உரித்தானதும், மேனி முழுதும் சட்டை நீங்கி ஒளி உமிழும் பளபளப்போடு விளங்குகிறது.

பாம்பின் பயன்.—மற்றெல்லா விலங்குகளையும் போலவே பாம்புக்கும் தற்காப்பு ஆயுதம் உண்டு. யாராவது தாக்கினுல் அல்லது துன்புறுத்த முற்பட்டால் துர்வாசனையான ஒரு திராவகத்தை சில பாம்புகள் வெளிப்படுத்துகின்றன. சில பாம்புகள் அபாயம் கண்டு சீறும், மற்றும் சில அபாயக் கட்டத்தில் உடல் பருத்து விளங்கக்கூடிய சக்தி பெற்றுள்ளன.

மலைப்பாம்பு போன்ற பாம்பு வகைகள் முட்டையிடுகின்றன. விரியன் பாம்பு போன்றவை குட்டி போடுகின்றன. முட்டையிடும் பாம்பும் சரி, குட்டிபோடும் பாம்பும் சரி, முட்டைகளையோ, குஞ்சுகளையோ அதிகம் கவனிப்பதில்லை. பாம்பு முட்டைகள் சூரிய வெப்பத்தால் குஞ்சு பொரிக்கின்றன.

தமிழ் நாட்டின் காடுகளில் ஊரும் ஜந்துக்களில் முக்கியமானவை மலைப்பாம்பு, சாரைப்பாம்பு, உடும்பு, முதலை ஆகியவை ஆகும்.

ஊரும் ஜந்துக்கள் நமது இயற்கைச் சூழ்நிலையில் ஒரு அம்சமாக விளங்குகின்றன. மற்ற ஜந்துக்களைக் கொன்று தின்னும் இயல்புடைய ஊரும் ஜந்துக்கள், தாங்களே உணவாகவும் அமைகின்றன. பாம்பினுல், மக்களுக்குப் பல பயன்கள் உண்டு. நேரடிப் பயன்கள் குறைவாக இருக்கலாம். ஆனுல் மறைமுகமான பலன்கள் அதிகம். பாம்புகள், பூச்சி பொட்டுக்களை ஒழிக்க உதவுகின்றன. சாரைப் பாம்புகள் மட்டும் இல்லை என்ருல், எலிகள் தொல்லை பெருகி, நமது உணவுப் பொருள்களைப் பெருமளவுக்குப் பாழ்படுத்தி விடும். பல்லிகள், ஏராளமான அளவில் பூச்சிகளை விழுங்கி விடுகின்றன. அப்படி பல்லிகள் பூச்சிகளை விழுங்காமல் இருக்குமானுல், அப் பூச்சிகளால் மனிதனுக்கு தொல்லைகள் எவ்வளவோ பெருகிவிடும். இது போலவே ஊரும் ஜந்துக்களில் ஒவ்வொன்றும் இயற்கை அமைப்பில் ஒவ்வொரு விதமான வேலைகளைக் கொண்டிருக்கின்றன. அதன்மூலம், உலகில் மக்கள் தொல்லையற்று இன்பமாக வாழ்வதற்கு மறைமுகமாக உதவுகின்றன.



முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் மலைப்பாம்பு

மலைப்பாம்பு

மலைப்பாம்பு.—பாம்பு வகைகளில் மிகப் பெரியது மலைப்பாம்பு. தமிழ் நாட்டில் சில இடங்களில் மட்டுமே மலைப்பாம்புகள் உள்ளன. முதுமலை வன விலங்குப் புகலிடத்தில் ஒரு பெரிய மலைப்பாம்பு 17 அடி நீளமுள்ளதாக இருந்தது. மற்ற இடங்களில் 20 அடி நீள பாம்புகள் இருந்திருக்கின்றன. மனிதர்கள் கொஞ்ச தூரத்தில் இருந்தால்கூட இப் பாம்புகள் எதுவும் செய்வதில்லை. வெளிறிய மஞ்சள் நிறத்திலிருந்து கரும் பழுப்பு, பழுப்பு நிறம் வரை பல்வேறு நிறங்களில் மலைப்பாம்புகள் உள்ளன. கருப்புப் புள்ளிகளுடன் இருக்கும் பாம்புகளும் உண்டு. இவற்றின் வண்ணக்கலவை விவரிக்க முடியாதபடி பலதரப்பட்டதாக உள்ளது.

அடர்த்தியான காடுகளில் பாறைப் பகுதிகளிலும், ஆற்றின் ஓரங்களிலும் மலைப்பாம்புகள் வசிக்கின்றன. இந்திய தீபகற்பம் முழுவதிலும் அத்துடன் இலங்கை, மலேயா, பர்மா, சையாம், ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் மலைப் பாம்புகள் உள்ளன. இடத்துக்கு இடம் உருவ அளவும் நிறமும் சற்று மாறுபடுகின்றன.

மலைப்பாம்பு இரவில்தான் நடமாடும். பகலில் அதிகம் வெளியே செல்லாது. பெண் பாம்பு முட்டையிட்டதும், உடலைச் சுருட்டி வைத்து முட்டைகளை அடைகாக்கிறது. இது ஏராளமாக முட்டையிடும். 1957-ல் எம். ஏ. ஸ்மித் எடுத்த ஒரு கணக்கின் படி ஒரு மலைப்பாம்பு 107 முட்டைகளை இட்டிருக்கிறது. முட்டைகள் வாத்து முட்டைகளைவிடப் பெரியவை. அடை காக்கும் காலம் சுமார் இரண்டு மாதத்துக்கும் மேற்படுகிறது. முட்டையிலிருந்து வரும்போது குஞ்சு சுமார் 2 அடி நீளம் இருக்கிறது.

பாம்பின் வாய்ப்பட்ட மான்.—முதுமலை வன விலங்குப் புகலிட வனத்தில் தெப்பக்காடு பகுதியில் மலைப்பாம்பு வங்கு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டு பாறைகளுக்கு இடையே $4\frac{1}{2}' \times 1'$

மலைப்பாம்பின் உடைந்த முட்டைகள்

நுழை வாயிலோடும் 12 அடி குழியாகவும் அந்த வங்கு அமைந்திருந்தது. 34 உடைந்த முட்டைகள் கிடந்தன. சில முட்டைகள் பாறைச் சரிவில் உருண்டு உடைந்துபோன அறிகுறிகளும் தென்பட்டன.

மலைப்பாம்பு, தன் வாலை மரக்கிளைகளில் இறுகச் சுற்றிக் கொண்டு தொங்கிய நிலையில் இரைக்காகக் காத்திருக்கும் வழக்கமுடையது. மற்ற பாம்புகளைப்போல கோபம், ரோஷம் மலைப்பாம்புக்கு கிடையாது. சோம்பலாகவும், நிதானத்தோடும் இருக்கும். மனிதர்கள் சூழ்ந்துகொண்டால் கூட பரபரப்பு அடையாது.

பறவைகள், மற்றும் ஊறும் ஜந்துக்களைத் தின்று மலைப் பாம்பு உயிர் வாழ்கிறது. மானைக்கூட அது விழுங்கிவிடும். 1961 மார்ச்சு 29-ந் தேதியன்று, முதுமலை வன விலங்குப் புகலிடத்தில் ஒரு மலைப்பாப்பு, ஒரு புள்ளிமானை விழுங்கிக் கொண்டிருந்ததைச் சிலர் பார்த்தனர். 1961 மே 16-ல் அதே பகுதியில் காட்டெருமைக் கன்றை ஒரு மலைப்பாம்பு விழுங்கிக்கொண்டிருந்ததைப் பலர் கண்டனர். கன்றைக் காக்க, தாய் எருமை எவ்வளவோ மூர்க்கமாகப் போராடிப் பார்த்தது, ஆனால் பலிக்கவில்லை.

இறகுகள், ரோமம் ஆகியவைகளுடன் பிராணிகளை விழுங்கி விடும் குணமுள்ளது மலைப்பாம்பு. அதன் உடல் கூறு, இதற்கு ஏற்ற மாதிரியில் அமைந்துள்ளது. தாடைகள், நன்றாக அகன்று விரியக்கூடியவை. பற்கள் தொண்டைப்புறம் நோக்கி வளைந்துள்ளன. எனவே இரையாகப் பிடிக்கப்பட்ட பிராணி அதிகம் துள்ளத் துள்ள, பற்களில் அது நன்றாக மாட்டிக் கொள்ளும். உடல் தோல் வேண்டுமான அளவு விரியும் தன்மை உள்ளது. விலா எலும்புகள் மிகத் தளக்கமாக உள்ளன. பிடித்த இறையை நன்றாக வளைத்துச் சுற்றி, அதைக் கொன்று உண்ணத் தொடங்குகிறது. பிடிபட்ட பிராணிகள் அந்தப் பாம்புப் பிடியிலிருந்து தப்பவே முடியாது.

வயிறு நிறையத் தின்ற பிறகு மலைப்பாம்பு ஒரே இடத்தில் அசைவற்று கிடக்கும். நீண்ட நாள் அது சுருண்டு படுத்துக் கிடக்கும். வயிறு நன்றாக நிறைந்த பின்பு மலைப்பாம்புகள்,

மலைப்பாம்பு வயிறு நிறைய தின்ற பிறகு சுருண்டு இருத்தல்.

ஒரு மாதத்திலிருந்து ஆறு மாதம் வரை இறை ஏதும் தொடாமல் கிடப்பது உண்டு. எச். என். ரிட்லே இந்த விவரங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்.

தோலும், கொழுப்பும்.—தமிழ் நாட்டில் மலைப்பாம்பு பெருகி வருகிறது. நல்ல முறையில் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. மலைப்பாம்பின் தோலும், கொழுப்பும், விலை மதிப்புள்ளவை. பெண்களின் கைப்பைகள், பணப்பை, இடுப்புக்கச்சைகள், பாத அணிகள் முதலியன செய்வதற்கு மலைப்பாம்புத் தோல்கள் பயன்படுகின்றன.

மலைப்பாம்பு வகைகள், பூண்டற்றுப் போவதைத் தடுக்க வேண்டுமானால், காடுகளில் வாழும் பழங்குடி மக்களிடையே இவ்விஷயமாக நல்ல முறையில் பிரச்சாரம் செய்ய வேண்டும், ஏனெனில், மலைப்பாம்பின் கொழுப்பு, மருந்துக்குப் பயன்படு கிறது என்பதற்காக, அப்பாம்புகளைக் கொல்லும் வழக்கம் பழங்குடி மக்களிடையே அதிகம் உள்ளது. நெஞ்சு வகிர்ந்து உள்ளே உள்ள கொழுப்பு எல்லாம் எடுக்கப்பட்ட நிலையில் இறந்து கிடந்த மலைப்பாம்புகள் பலவற்றை நான் பார்த்திருக் கிறேன்.

சாரைப்பாம்பு

சாரைப்பாம்பு

சாரைப்பாம்பு.—சாரைப்பாம்பு, பச்சைப் பழுப்பு நிறத்துடன் எட்டு முதல் பத்து அடி வரை நீளமுள்ளது. செதிள்கள் கருப்பு நிறமுள்ளனவாக இருக்கின்றன. லாகவமாக துரித மாகச் செல்லக்கூடிய சுறுசுறுப்பான பாம்பு இது. யாராவது துரத்தி வந்தால், தரையில் அனேகமாகப் பறப்பது போன்ற வேகத்தில் செல்லும். முதுமலை வன விலங்குப் புகலிடத்தில் ஒரு காவலாளியின் குடிசையில் பிடிக்கப்பட்ட சாரைப்பாம்பு 7 அடி 3 அங்குல நீளமிருந்தது.

இந்தியா முழுவதிலும் இந்தப் பாம்பு காணப்படுகிறது. காடுகளிலும், மனிதர்கள் வசிக்கும் மற்றப் பகுதிகளில் எலிகளை நாடியும் இவை உலாவுகின்றன. தவளை என்ருல் இதற்கு மிகவும் பிடிக்கும். எனவே, நீர்க்கால் ஓரங்களிலும் சாரைப் பாம்பு அதிகம் இருக்கும். இலங்கை, ஐரோப்பிய நாடுகள், இதர ஆசிய நாடுகள், வடக்கு, மத்திய அமெரிக்க நாடுகள் ஆகியவைகளில் எல்லாம் சாரைப்பாம்புகள் உள்ளன. மலைப் பாம்பு போல அல்லாது இது அநேகமாக தினமும் இரை தின்னும் வழக்கமுள்ளது. சாரைப்பாம்புக்கு ஆங்கிலத்தில் (Indian Rat Snake) என்று பெயர். இது எலிகளை மட்டும் தான் தின்கிறது என்பதில்லை. தவளை, பல்லி, பறவைகள், பறவைகளின் முட்டைகள் ஆகியவற்றையும் இவை விரும்பித் தின்னும். இப் பாம்புகள் நன்ருக நீந்தக்கூடியவை; மரம் ஏறக்கூடியவை. சினங்கொண்டபோது, படம் எடுப்பதுபோல இவை கழுத்தைப் புடைத்துக் காட்டும். சாரைப்பாம்பு விஷம் இல்லாதது.

சாரைப்பாம்பு பூமியில் வளைதோண்டி முட்டை இடுகிறது ஒரு சமயத்தில் 10-லிருந்து 12 முட்டைகள் வரை இடுகிறது.

சாரைப்பாம்பு பற்றி எத்தனையோ கதைகள் உள்ளன. சாரைப்பாம்பு நாகப்பாம்புடன் இணைகொள்கிறது என்று சிலர் சொல்லுகிருர்கள். பசுவின் மடியை உறிஞ்சி, பசுவைக் கொன்று விடக்கூடிய தன்மை உள்ளது என்றும் சிலர் சொல்லுகிருர்கள்.

முதியவர்களை இப் பாம்பு கடித்தால், கண் குருடாகிவிடும் என்று நம்புபவர்களும் உண்டு. சாரைப்பாம்பின் கொழுப்பை, குஷ்டநோய் உள்ளவர்களுக்கு மேல் பூச்சாகப் பூசினால், அதனால் நோய் குணமாகும் என்று சிலர் எண்ணுகிறார்கள்.

உணவு தானியங்களைப் பெருமளவில் நாசப்படுத்தக்கூடிய எலித் தொல்லையை ஒழிக்க உதவுகிறது என்ற முறையில் சாரைப்பாம்பு இனம் காப்பாற்றப்படவேண்டும். எலிகளால், உணவு பாழாகிறது என்பது மட்டுமல்ல; பல வியாதிகள் பரவுவதற்கும் எலியே காரணமாக அமைகின்றது. எலியை மட்டுமே பிரதானமாகத் தின்று வாழக்கூடிய விலங்குகள் சில மட்டுமே உண்டு. அவற்றுள் ஒன்று சாரைப்பாம்பு. சாரைப் பாம்புகளை ஓடி ஓடிக்கொன்று அதை ஒழித்துவிட்ட கிராம வாசிகள் பின்பு, எலித் தொல்லையை சமாளிக்க வகை தெரியா மல் தங்கள் செய்கைக்காக வருந்திய சம்பவங்கள் பல உண்டு.

உடும்பு

உடும்பு.—பல்லி இன வகையிலே தமிழ் நாட்டில் மிகப் பெரிய பிராணியாக விளங்குவது உடும்பு. உடும்புகள் 3 முதல் 4 அடி வரை நீளமுள்ளவை.

முதிர்ந்த உடும்புகள், கருப்புப் புள்ளி மேனிக்கு மேல் பழுப்பு நிறமுள்ளவையாக இருக்கின்றன. அடிப்பாகம் மஞ்சள் நிற மாக அல்லது பல்வேறு புள்ளிகள் அமைந்ததாக உள்ளது. உடும்பின் உறுப்புகள் மிக உறுதியானவை. பாதங்கள்; 'உடும்புப் பிடி' என்பதற்கேற்ப வெகு உறுதியோடு பற்றிக் கொள்ளும் தன்மை உள்ளவை. சூழ்நிலைக்கேற்ப வண்ணம் மாறும் தன்மை உள்ளது உடும்பு.

உடும்பு, காடுகளிலும் நாட்டுப்புறங்களிலும் தென்படுகின்றது. இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உடும்பைக் காணலாம். இலங்கை, பர்மா, நேபாளம் ஆகியவைகளிலும் உடும்புகள் உள்ளன.

உடும்பு வேகமாக இயங்கக்கூடியது. சில சமயங்களில் தப்பு வதற்காக, ஆடாமல் அசையாமல் படுத்துக்கொள்ளும். உண வுக்காக, வனங்களில் கூடாரங்கள், குடிசைகள் ஆகியவைகளில் இது துணிவுடன் நுழைந்துவிடும். தூரத்திலிருந்த நிலையில் ஆத்திரமூட்டப்பட்டால், வாலை ஆட்டியபடி சீறும் தன்மை உள்ளது. விரோதியைக் கடிக்கவும் அஞ்சாது. உடும்புப் பிடி என்பது பிரசித்தமானது. உடும்பு ஒரு பொருளைப் பற்றிக் கொண்டால் அதைப் பிடுங்குவது மிகவும் கஷ்டம். இதன் பிடி உறுதிக்கு உதாரணமாகப் பல கதைகள் உண்டு.

புற்றிலோ, வளைகளிலோ உடும்பு முட்டையிடும். இலைகள் முதலியவற்றைப் போட்டு மூடிவைக்கும். பின்பு அப் பெண் உடும்பு அந்தப் பக்கமே திரும்பாது. ஒரு அடையில் 20-லிருந்து 25 முட்டைகள் வரை இருக்கும். உடும்பு வெயில் காலத்தில் முட்டை இடுகிறது. உடும்பின் இறைச்சியும், முட்டையும் மிகச் சுவையானவை. உடும்பு இறைச்சி, பக்கவாதத்துக்கு தக்க

உடும்பு

மருந்து என்று பழங்குடி மக்கள் நம்புகிறார்கள். வேட்டை நாய் அல்லது வலைப் பொறி உதவியுடன் மலைவாழ் மக்கள் உடும்பைப் பிடிக்கிறார்கள்.

எலி, பறவைகள், பறவை முட்டைகள், பூச்சிகள் போன்றவை களைத் தின்று உடும்பு உயிர்வாழ்கிறது. பறவைகளின் கூடு களில் உள்ள முட்டைகளைத் தின்பதற்காக, இது வெகு லாவக மாக மரம் ஏறும்.

உடும்பினால், கோழிகளுக்குப் பெரும் சேதம் ஏற்படுவது உண்டு. ஆனால், விஷப் பூச்சி புழுக்களைக் கொல்லுவது மூலம் இது மனித குலத்துக்கு உதவுகிறது. எனவே, உடும்பு இனத் தைப் பாதுகாப்பது அவசியம்,

தமிழ்நாடு அரசாங்கத்திற்காக தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத்தொழில் கட்டுப்பாட்டு அதிகாரியால் பதிப்பிக்கப்பெற்றது

வன விலங்குகளைப் பேணுங்கள்

அவை நம் நாட்டின் சொத்து

Southern Forest Rangers College
LIBRARY
Regd. ...679... 25/169
Date ...7.84...
COIMBATORE.

மோயார் பள்ளத்தாக்கில் உள்ள நீர்வீழ்ச்சி